# சார்பு நீதிமன்றம், சீர்காழி.

## S.C. 52/2018

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 05-ம் நாள் செவ்வாய்கிழமை PW-6 இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

Deposition of LW7 Examined as PW6

| | | |
|---|---|---|
| Date | : | 05.12.2023 |
| Name | : | கார்த்திக் |
| Husband Name/Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Post | : | |
| Religion | : | |
| Age | : | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் எடமணலில் வசித்து விவசாயம் செய்கிறேன். அஜர் எதிரிகளை தெரியும். பட்டியல் சாட்சி 1 முதல் 4 வரை தெரியும். போலிசார் என்னை விசாரிக்கவில்ல.

**(சாட்சி ஆய்வாளர் முன்பாக அளித்த வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது)**

எங்கள் ஊரைச்சேர்ந்த அவருடைய ஒன்று விட்டபங்காளி ஞானசேகர்குடும்பத்தாருக்கும் முன்பகை இருந்து வந்தது. ராஜேந்திரன் என்பவரை காரை ஞானசேகரன்மகன் மோகன் என்பவரிடம் பழுது பார்க்கவிட்டிருந்தார் என்றும் மோகன் காரை ஓடடிச்சென்று அதற்கான செலவுத்தொகையை மோகன் கொடுக்கவேண்டும் என்றும் அதன்

சம்பந்தமாக ஊர்ப ஞ்சாயத்தில் பேசிக்கொள்ளாலம் என்று இருந்ததாகவும், மகேந்திரன் சொல்லிதான் ராஜேந்திரன் மோகனை செலவுத்தொகை கொடுக்கவேண்டும் என்று கேட்டார் என்று மகேந்திரனை தகாத வார்த்தையால் தி்டினார் என்றும் கடந்த 24.10.2009 அன்று இரவு எங்கள் ஊர் காளியம்மன்கோவிலில் பெருமாள்குடும்பத்தார் மண்டபடி நடந்து அதில் எங்கள் ஊர்காரர்கள் கலந்துக்கொண்டு இரவு 8.30 மணிக்குகோவில்வாசலில் நின்றுக்கொண்டிருந்தபோது ஞானசேகரன் மகன்மோகன் தகாத வார்த்தையால்திட்டி வீண் பிரச்சனை செய்து கையில்வைத்திருந்த டார்ச்ரைட்டை அடித்து பார்த்தபோது மோகன் அருவாளுடனும் ஞானசேகர்கலி கம்புடன் ராஜ்குமார் கட்டை கழியுடன் மோகன்ராஜ் இரும்பு கம்பியுன் ஆபாசமாக பேசி வெங்கடேசன் குடும்பதையே கொளுத்தவிடுவோம் என்றும் டார்ச் லைட் அடித்து பார்த்து மோகன் மற்றும் அவரது தந்தை ஆகியோர் வெங்கடேசன் மற்றும்அவரது மகன் மகநேந்திரன் பாலசுப்பிரமணியன், தாக்கியதாகவும், மோகன் கையில்வைத்திருந்த அருவாளால் மகேந்திரன் ஓங்கி வெட்டி வலது காது வலதுபக்க நெஞ்சு காயம் ஏற்பட்டது என்றும்மோகன்ராஜ் இரும்பு கம்பியால் மண்டையில் அடித்ததாகவும்பட்டியல் சாட்சி 1 முதல்4 மாறி மாறி அடித்ததாகவும், அதன் பிறகு நான், அம்பலவாணனன் மகன் முருகன் ஊர்காரர்கள் சத்தம்போட்டு விலக்கிவிட்டு அவர்கள் ஓடிவிட்டதாகவும் இந்த சம்பவத்தை நேரில்பார்த்ததாகவும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.